இந்திய கிறிஸ்தவ மருத்துவ சங்கம், புது தில்லி.

குணமளிக்கும் பணி - வழிபாட்டு முறைமை. ஞாயிறு, பெப்ருவரி 10, 2019.

கருப்பொருள்: "என்னைத் தொட்டது யார்?" லூக்கா. 8:44-46.

1. **வழிபாட்டிற்கு அழைப்பு :**

நம்மை விடுவித்து குணமாக்கி மற்றும் நமக்கு புது வாழ்வுதரும் இறைவனை வழிபடுவோம் வாருங்கள்.

சோர்வுற்றிருப்போரே நீங்கள், உங்கள் நம்பிக்கையை இறைவன்மேல் வைத்திட வாருங்கள் ஏனெனில், மாறாத அன்பும், முடிவற்ற மீட்பும் அவரிடமே உண்டு.

எங்கள் ஆண்டவனே, எங்கள் இறைவனே, நீரே எங்கள் சகாயர், கேடயம். உம்மையே நம்புகிறோம்.

துன்பம் மற்றும் வேதனையிலிருப்போரே, வாருங்கள்.

எங்கள் ஆண்டவனே, எங்கள் இறைவனே, சகாயத்திற்காக உம்மை அழைத்தோம், நீர் எம்மை குணமாக்கினீர்.

நம்மை குணமாக்கி மன்னித்தவரை வழிபடுவோம், வாருங்கள்.

இறைவனே, எங்கள் இன்னல்களை நீக்கி, மகிழ்வைத் தந்ததாலும், நீர் தந்த மன்னிப்பு, செய்த நன்மைகளுக்காகவும், உம்மிடம் விண்ணப்பித்த அனைவருக்கும் அளவிலாத உமது அன்பைப் பொழிந்ததாலும், எங்கள் துதிகளோடு உம்மை கனம்பண்ணுகிறோம்.

2. **வரவேற்பு:**

3. **துவக்க விண்ணப்பம் / இந்நாளுக்குரிய விண்ணப்பம்:**

இரக்கமுள்ள இறைவனே, சகல குணமாகுதலுக்கும் ஆதாரமே, உமது வாக்குதத்தங்களை நினைவுக் கூர்ந்தவர்களாக உம்மண்டை வருகிறோம். உம்மை நாடியப்பொழுதெல்லாம் எங்களை தொட்டு, குணமாக்கினீர். பெருங்குழப்பங்களோடு நாங்கள் தவித்திருக்கும்போது உமது தொடுதலை உணர்ந்தும், நம்பிக்கையை உணரவும் உதவிசெய்யும். எங்களது ஓய்வில்லா வாழ்விலிருந்து அழைத்து, உள்ளான இருதயத்திலிருந்து எங்கள் மறுமொழியை எதிர்ப்பார்க்கிறீர். உமது ப்ரசன்னத்தில் நாங்கள் வரும்போது, உலகிற்கான உமது செயல்திட்டங்களுக்கு இடையூறாகவும், அவ்வப்பொழுது தடைக்கற்களகவும் இருந்தோம் என்பதை, உமது அழைப்பிற்கு மறு உத்திரவாக ஒப்புக்கொள்ளுகிறோம். மண்ணுலகில் இறையரசைக் காண எங்களுக்கு போதித்து உணர்வடையச் செய்யும். எங்கள் மனதில், உம்மீது நம்பிக்கை, மீட்பின் மகிழ்ச்சியைப் பதியவைத்து, எங்கள் வாழ்வில் குணமாகுதல் மற்றும் நம்பிக்கை வற்றாத நதியைப்போல் புரண்டுவர, எங்கள் வாழ்வை வலிமைப் படுத்தும். உம்மை வழிபடும் இவ்வேளையில், நீர் எமக்கு செவிசாய்த்து, உமக்கு நாங்கள் செவிசாய்த்திடவும் அருள்புரியும். **ஆமென்.**

4. **துவக்கப் பாடல்:**

5. **நன்றி செலுத்துதல்:**

6. **பாவ அறிக்கை - பாவ மன்னிப்பின் உறுதி:**

7. **வேத பாடங்கள்:**

பழைய ஏற்பாடு: ஏசாயா. 6:1-8.

நிருப பாடம்: அப்போஸ்தலர். 3:1-10.

நற்செய்தி: லூக்கா. 8:43-48.

8. குணமளிக்கும் பணி - முன்னுரை:

இயேசு கிறிஸ்துவின் குணமளிக்கும் பணியானது, அவரது இரக்கமுள்ள அக்கறை, வாழ்வு மற்றும் பணியை அடிப்படையாகக் கொண்டது. அவரது மண்ணுலக வாழ்வில், உபதேசிக்க, கற்பிக்க மற்றும் குணமளிக்க விடுத்த அழைப்பு, இன்னும் நம்மை அழைத்துக்கொண்டிருக்கிறது. அவரது விருப்பம், அனைவரும் நிறைவான வாழ்வை பெறவேண்டும் என்பதே. நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவே ஆதிமுதல் இன்றுமட்டும் ஒவ்வொரு குணமாகுதலுக்கும் ஆதாரம். இக்குணமாகுதல், ஆன்மீகம், மனம் சார்ந்த, உடல் சார்ந்த, மனித உணர்வுகள் தொடர்பான மற்றும் சமூகம் சார்ந்த பல்வகை அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

நம் இந்திய நாட்டில், 1905ம் ஆண்டில், குணமளிக்கும் பணியானது, இந்திய மருத்துவம்சார்ந்த சமயப் பரப்பாளர் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 1926ல், இந்திய கிறிஸ்தவ மருத்துவ சங்கமென பெயர் மாற்றப்பட்டது. இன்றுமட்டும், இச்சங்கத்தில் ஏறக்குறைய 300 கிறிஸ்தவம் சார்ந்த மருத்துவமனைகள், குறிப்பாக, லூதியானா (பஞ்சாப்) மற்றும் வேலூரில் (தமிழ்நாடு) பெரும் புகழ்மிக்க மருத்துவக் கல்லூரிகளும் உள்ளடங்கும். குணமளிக்கும் பணியில் இச்சங்கமானது, 10,000ற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மருத்துவ தொழில் வல்லுநர்களை ஒருசேரக் கொண்டுள்ளது. நமது நாட்டில், உடல்ரீதியான பல்வேறு தேவைகளைச் சந்தித்து வந்ததால், இச்சங்கம் வலிமைமேல் வலிமை பெற்றுள்ளது. இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் பல்வேறு துறைகளில், குறிப்பாக, தொழுநோய், காசநோய், நச்சுக்காற்று காய்ச்சல் மற்றும் ஹெச் ஐ வி / எய்ட்ஸ் போன்ற துறைகளில் முன்னோடிகளாக பணிபுரிந்துள்ளனர். நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கிணங்க, இந்திய திருச்சபைகளோடு இணைந்தும், உடன்நின்று உறுதுணையாகவும் செயல்பட்டும், குணமளிக்கும் பணியின் வழியாக, ஓர் சீரான மற்றும் ஆரோக்கியமான மனித சமுதாயத்தை உருவாக்குவதே இச்சங்கத்தின் குறிக்கோளாகும்.

9. அருளுரைக்கான ஆலோசனக் குறிப்புகள்: கருப்பொருள்: "என்னைத் தொட்டது யார்?"

முன்னுரை : கூட்டத்தினர் இயேசுவை நெருங்கி தொட்டதற்கும், அந்தப் பெண்ணின் தொடுதலுக்கும் மாறுபாடு இருந்தது. அப்பெண்ணின் தொடுதல், விசுவாசம், மன உறுதியான நம்பிக்கை மற்றும் வலிமைமிக்கதாக இருந்தது.

பழைய ஏற்பாடு :

பழைய ஏற்பாட்டில், யூதா அரசாட்சியிலிருந்த புரட்சியாளர்களை சந்திக்க இறைவனால் தெரிவு செய்யப்பட்ட தூதுவன், ஏசாயா, தனது சம்மதத்தை தெரிவிக்கிறான். இறைவன், ஏசாயாவின் அக்கிரமம் நீங்கும்பொருட்டு, சேராபீன்களில் ஒருவனை, பலிபீடத்திலிருந்த ஒரு நெருப்புத் தழலீனால் அவனது வாயைத் தொட செய்தார். இறைவன், இவ்வலிமைமிக்கச் செயலால், ஏசாயாவின் அனைத்து அக்கிரமங்களையும் நீக்கி, தனது பிரதிநிதியாக்குகிறார்.

புதிய ஏற்பாடு :

பன்னிரெண்டு ஆண்டுகளாக பெரும்பாடுள்ளவளாயிருந்த ஓர் பெண்ணின் துயர்மிகு சூழ்நிலை. சரீரத்தால் தொய்ந்துப் போனவளாக, மற்றும் தொடர் உதிரப்போக்கினால் பாதிக்கப்பட்டவளாக இருந்திருக்க வேண்டும். தனது செல்வத்தையெல்லாம் மருத்துவர்களுக்கும், மருந்து வகைகளுக்கும் செலவிட்டு, சோர்வுற்றிருப்பாள்.

லேவியர்களின் ஆசார சடங்குகளின்படி, அவள் தூய்மையற்றவளாக காணப்பட்டதாலும், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவளாக இருந்ததாலும், சமய வழிபாடுகளில் பங்குபெற அனுமதிக்கப்படவில்லை. ஓர் யூத மதப்போதகர், ஒரு பெண்ணால், அதிலும் தூய்மையற்ற பெண்ணால் தொடுவதென்பது ஏற்புடையதல்ல.

எனவே, இயேசுவின் பின்னே பதுங்கி, தலைக்குனிந்து வந்து, அவரது உடுப்பின் ஓரத்தைத் தொட சமாளிக்க முடிந்தது.

அந்தப்பெண் நம்பிக்கையோடு தொட்டதினால், அவள் குணமானாள். இயேசுவின் வல்லமை அவரிடமிருந்து வெளிப்பட்டதால் அவளது முந்தைய நிலைமையைப் பெற்றாள்.

இப்படியாக, இயேசு அந்தப் பெண்ணின் தூய்மையற்ற நிலைமையை தம்மீது ஏற்றுக்கொண்டதால், தாமே தூய்மையற்றவரானார். சிலுவையில், கனவீனத்திற்குரிய மரணத்தை ஏற்றுக்கொண்டதும் நமது

பாவங்களுக்காகவே என்பதின் வழியாக, தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டார். உபா 21:22-23ன்படி, மரத்தில் தூக்கிலிடப்பட்டவன் இறைவனால் சபிக்கப்பட்டவனாவான்.

ஆயினும், இயேசுவை அந்தப் பெண் தொட்டு, சுகம் பெற்றபின் ஏன் மௌனமானார்? ஏனெனில், அவளது வருந்தத்தக்க நிலையும், அவள் பெற்றுக்கொண்ட நிவாரணம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், அவளது செயல் எந்த விதத்திலேயும் இடையூராக இருக்கவில்லை என்பதையும், மற்றும் அவளது சிறப்புத் தன்மையை அவளே உணரவேண்டும் என்பதறக்காகவே இயேசு மௌனமாயிருந்தார். 'மகளே' என யாரேனும் ஒருவர் அவளை அழைக்க வேண்டும், அவள் தனது நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும், சமாதானத்தோடு அவள் இல்லம் திரும்பவேண்டும் என இயேசு விரும்பினார் (லூக்கா. 8:48). இவ்விதமாக, இயேசு தனது கனிவான வார்த்தைகளால் அவள் குணமாகியதை உறுதி செய்துக்கொண்டும், பிறரது அறிவையும் விரிவாக்கினார்.

முடிவுரை :

இறைவனது குணமளிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நாம், சிறந்து குணமளிப்பவரை அணுகி, வலிமையைப் பெற நாம் அவரது ஆடையின் தொங்கலைத் தொடுவது அவசியமாகிறது. அளவிலா, சொல்ல இயலாத சிரமங்கள் மற்றும் கடும் வேதனைகளோடு நம்மை சந்திப்போருக்கு எங்ஙனம் நாம் பதிலளிப்போம்? நம்மை நாடிவருவோருடைய சரீர தேவைகள் சந்திக்கப்படுவதால், அவர்களை தொடர்ந்து எல்லைக்கோட்டிற்கு அப்பற்பட்டவர்களாக, இகழப்பட்டவர்களாக மற்றும் சமுதாயத்தினின்று ஒதுக்கப்பட்டவர்களென்ற நிலையிலேயே விட்டு செல்கிறோமா? தொற்றுநோய், காயங்கள், தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள், ஹெச் ஐ வி / எய்ட்ஸ், மற்றும் பொருத்தமற்ற சரீர அமைப்பு உள்ளதால் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுவோரை எவ்விதம் பராமரிக்கப் போகிறோம்? இப்படிப்பட்டோரை, தீட்டென ஒதுக்குவதும், துரத்திவிடுவதும் சுலபமே.

ஆனால், இயேசுவின் உதாரணத்தை நம்முன் நிறுத்தி, அவரைப்போல், குறைவுகளோடு வாழ்வோரையும், ஒதுக்கப்பட்டவர்களையும் மனமாற அணுகி, அவரைப் போல் முன்னேற முயன்றிடுவோம். நமது மருத்துவமனைகளும், திருச்சபைகளும் இப்படிப்பட்டோரை ஏற்றுக் கொள்கிறதா? இயேசு சொன்னார், "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை," (மத். 9:12). நம்முடைய பிறனுக்கு நாம் நல்ல சமாரியனா? தேவையிலிருப்போர் குணமாகுமளவிறகு நமது கரிசனை ஆழமுள்ளதாக இருக்கிறதா?

விண்ணப்பம் :

10. **பரிந்துரை மன்றாடுதல் :**

நடத்துநர் : அன்பின் இறைவா, இன்று, குணமளிக்கும் உமது தொடுதலுக்காக உம்மண்டை வருகிறோம். உம்மில் எல்லாம் கூடும். உமது சிந்தனையோடு எங்களது சிந்தனைகளை இணைத்து, எங்களது ஆவி, ஆத்துமா, சரீரத்தை புதுப்பித்தருளும். காணாமற்போன ஆட்டைப்போல் உமது இரக்கத்தை நாடி வருகிறோம். உமது பெலனை எங்களுக்குத் தந்து, நீர் எங்களுக்குக் காட்டிய வழியில் நம்பிக்கையோடு பயணித்து முன்னேற எங்களுக்கு அருள்புரியும்.

அனைவரும் : இரக்கமுள்ள இறைவா, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

நடத்துநர் : பரலோகத் தந்தையே, உமது மைந்தன் எங்களுடன் வாழ, எங்களுக்காக பாடுபட்டு மரிக்க, அவரது தழும்புகளால் நாங்கள் குணமாக அவரைத் தந்தீர். ஆண்டவராகிய இயேசுவே, மண்ணுலகில் நீர் வாழ்ந்தப்போது, நோயாளிகளை குணமாக்கி, வறியோர்மீது அக்கறைக் கொண்டீர். நீர் நேசித்ததைப்போல், எங்கள் பராமரிப்பிலுள்ளவர்களை நாங்கள் நேசிக்க அருள்புரியும். சிறப்பாக, தாதிமார், சிகிச்சையளிப்போர், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மற்றும் இல்லங்கள் சென்று பராமரிப்போருக்காக வேண்டுகிறோம். அன்பின் இறைவா, மேற்கண்டோர் சிறந்து பணிபுரிய போதித்து, அன்போடு உறையாடி, வலிமையோடு செயல்படச் செய்யும். நீர் அவர்களுக்குத் தந்த எல்லா தாலந்துகளோடு நல்ல காப்பாளர்களாகவும், வலிமையற்ற, தொய்ந்துப் போனவர்களின் மன உற்சாகத்தை உயர்த்துபவர்களாகவும் செயல்பட அருள்புரியும்.

அனைவரும் : இரக்கமுள்ள இறைவா, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

நடத்துநர்: வியாதியஸ்தர், பெலமற்றோர் மற்றும் தொல்லைகளோடிருப்போருக்காக மன்றாடுகின்றோம். குறிப்பாக, உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு உமது குணமளிக்கும் தொடுதலே தங்களது நம்பிக்கையென வாழும் சிறுவர்களுக்காக மன்றாடுகின்றோம். உமது ப்ரசன்னத்தை அறியவும், உமது வல்லமையை உணரவும், உமது அன்பை தெரிந்துக்கொள்ளவும், அவர்களது வாழ்வு

சத்தியத்திலும், ஒளியிலும், ஆரோக்கியத்திலும், பரிபூரணத்திலும் நிறைந்திருக்கவும் அருள்புரியும். வியாதியிலுள்ளோரின் அன்பு உறவுகளுக்காக மன்றாடுகின்றோம். நீரே அவர்கள் தங்களது வியாதியிலுள்ளவர்களை கரிசனையோடு கவனித்துக் கொள்ளும்போதும், அவர்களது இயலாமையில் நம்பிக்கையும், வலிமையுமாக இருந்தருளும்.

அனைவரும் : இரக்கமுள்ள இறைவா, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

நடத்துநர் : எல்லாம் வல்ல இறைவா, நாடு முழுவதும் பரந்திருக்கும் இந்திய கிறிஸ்துவ மருத்துவ சங்க அமைப்புகளுக்காக, அங்கத்தினர்களுக்காக, அவர்கள், நோயுற்றிருப்போர், துன்புற்றிருப்போர், துயருற்றிருப்போருக்கு செய்யும் பணிவிடையில், உமது குமாரன் இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்திட மன்றாடுகின்றோம். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்து, நாட்டில், சலுகைக் குறைவுள்ளவர்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களுக்காகப் பணிபுரியும்போது, ஆண்டவா, உமது முகம் எங்கள் மீது பிரகாசிக்க வேண்டுகிறோம். உமது வல்லமையிலிருந்து நாங்கள் வல்லமைப் பெற்று எங்கள் நம்பிக்கையில் உறுதியாக வாழ்ந்து, சேவை செய்திட அருள்புரியும்.

அனைவரும் : இரக்கமுள்ள இறைவா, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

நடத்துநர் : இறைவா, இந்திய திருச்சபைகளின் மருத்துவக் கரமாக விளங்கும் சி எம் ஏ ஐ, தொடர்ந்து மக்களுக்கு உத்தமமாய் பணியாற்றிட விண்ணப்பிக்கின்றோம். திருச்சபயின் பல்வேறு மருத்துவப் பணிகளை, மருத்துவர்கள், தாதிமார், பல்வேறுதுறைக் கூட்டுப்பணியாளர்கள், சமயப் பணியாளர்கள், மருத்துவமனை நிர்வாகிகள், மற்றும் ஏழைகள், மாற்றுத்திரனாளிகள், மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்க்காக அயறாது உழைக்கும் அனைத்து பணியாளர்களை உம்முடையக் கரங்களில் ஒப்படைக்கின்றோம். இப்படிப்பட்ட பணியாளர்களை உம்முடைய இரக்கங்களினால் நிரப்பி, மற்றும் உமது தொட்டு குணமளிக்கும் பணியின் தூதுவர்களாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். இவர்களுக்கு ஞானம், மனவலிமை மற்றும் நேர்மை தன்மைகளைத் தாரும். உமது அன்பு மற்றும் இரக்கத்தால் எம்மையும் தொட்டு, உமக்காக பணிப்புரிய உதவிசெய்யும்.

அனைவரும்: இரக்கமுள்ள இறைவா, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும், ஆமென்.

(நடத்துநர், மற்ற குறிப்புகளுக்காகவும் விண்ணப்பித்து, ஆயரின் இறுதி விண்ணப்பத்தோடு முடிக்கலாம்.)

11. பாடல் (காணிக்கை) :

12. (திருவிருந்து வழிபாடாக இருக்குமெனில், திருவிருந்து வழிபாடு தொடர்ந்து, முடிவான விண்ணப்பம், இறையாசியோடு முடிவடையலாம்)

குணமளிக்கும் வழிபாட்டில் சேகரிக்கப்பட்ட காணிக்கை, கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பலாம் :

CMAI Office, Plot No.2, A-3, Local Shopping Centre, Janakpuri, New Delhi, by Demand Draft / Cheque in favour of 'CMAI, New Delhi.'

If you choose to contribute directly to the Hospitals in cash or in kind, then, kindly inform us at the following email IDs cmai@cmai.org and imtimenla@cmai.org for Office records.

நாள் 1, திங்கட்கிழமை, பெப்ருவரி 11, 2019. **கருப்பொருள்:** என்னைத் தொட்டது யார்?

மறைந்திருந்த மக்களை மறைவற்றவர்களாக்கியது. மாற்கு 14:3-9.

நாம் வாழ்ந்துவரும் உலகம் நம்மை பல்வேறுதிசைகளிலிருந்து இழுபறி நிலைக்குள்ளாக்கி மற்றும் அவ்வப்பொழுது நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியும் பேரழிவு உணர்வையும் தருகிறது. வாழ்வு, அதிகப்பட்சமாக எதிர்ப்பார்ப்புகளோடும், ஒவ்வொரு நபரும் சந்திக்கும் சூழ்நிலைகளும் மற்றும் பிரச்சனைகளும் தனித்தன்மையுடையதாகவும், மற்றும் தொடர்ச்சியாக ஆதரவு அளிக்கும் அமைப்பை எதிர்ப்பார்த்துக்கொண்டுள்ளது.

மாற்கு 14:3-9, இப்பகுதியை அடிப்படையாக வைத்துப்பார்ப்போம். பெயரிடப்படாத ஓர்பெண்மணி விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, (300 தினாரி, ஒருவேளை ஒருவருடத்தின் வருமானம்), அதை உடைத்து அந்தத் தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றினாள். அதாவது, அவர் மரணித்து, அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமாக அவரை அபிஷேகம்செய்து ஆயத்தப்படுத்தினாள். ஓர் ரபியின் தொடுதல் அந்தப் பெண்மணிக்குத் தேவைப்பட்டிருந்தது, மாறாக, அவளே அவரை மறைமுகமாக / மானசீகமாகத் தொட்டுவிட்டாள். "என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்," என்று இயேசு அவளுடைய நம்பிக்கையை மெச்சினார். "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்," (வச8). இயேசுவின் சீடர்களும், குழுமியிருந்தவர்களும் தங்களது முறுமுறுப்பை அவள்மீது காட்டினார்கள். இறைமைந்தன், மேசியா, மீட்பர், குணமளிக்கிறவர் மற்றும் விடுவிக்கிறவர் **'இவர்தான்'** என அறிந்துக் கொண்டாள். இந்த பெயரிடப்படாதப் பெண்மணி இயேசுவை உண்மையாக பின்பற்றுகிறவளானாள். **'இந்த யார்'** என்பவள்தான் நேசிக்கவும் நேசிக்கப்படக்கூடிய கருவியுமானாள், மற்றும் இதன்பிறகு அந்த அன்பை பிறரோடு பகிர்ந்துக்கொள்ளவும், சுகமும், காயப்பட்டுள்ளவர்களுக்குப் பரிபூரணமும் கொண்டுவரக் கூடியவளுமானாள். ஒரேயொரு நம்பிக்கையோடு **தொடுதல்,** அது மானசீகமான தொடுதலாக இருந்திருப்பினும் அத்தொடுதலே அவளது வாழ்வின் மறுரூபத்திற்கேற்ற குணமாகுதலுக்குத் தேவையான ஒன்றானது.

மகளிர், பிள்ளைகள், முதியோர், மனநிலைக்குன்றியோர், திருச்சபையிலிருந்து விலக்கு செய்யப்பட்டோர், குழந்தைப் பேரற்றோர், தீராத மருத்துவம்சார்ந்த உடல்நலக் குறைவுள்ள மக்கள், போதைமருந்துகளுக்கு அடிமையானோர், குடும்பம்சார்ந்த வன்முறையால் பாதிக்கப்பட்டோர், குழந்தை பாலியல் கொடுமைக்குட்ப்பட்டோர், மணமுடிக்காத தாய்மார்கள், பால்வேறுபாடு சார்ந்த மக்கள், சாதி, சமயநல்லிணக்கத் தம்பதியர், மற்றும், பெயரிடப்படாத மற்றும் மறைந்துவாழ்வோர், மற்றும் வாழும்யெல்லைக் கடந்து வாழ்வோரைக் குறித்து சற்றுநேரம் மௌனமாக இருந்து சிந்திப்போம். மேற்குறிப்பிட்டோரை அவ்வப்பொழுது நியாயம் தீர்த்தும், கோபத்தில் நிராகரித்தும் வருகிறோம். அவளைச்சார்ந்த இயேசுவின் வார்த்தைகளை மீண்டுமொருமுறை கேட்ப்போம், "அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்?" (வச.6). "இந்த நற்செய்தி உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்." (வச.9a).

சிந்தனைக்குரிய ஆகாரம் :

1. உங்களது செல்வாக்குள்ள வட்டத்திற்குள், உங்களால் புறக்கணிக்கப்பட்டும், அசட்டை செய்யப்பட்டும், பெயரிட்டுக் குறிக்கப்பட இயலாத மக்களை அடையாளம் காட்டுங்கள்.
2. தனிப்பட்டவகையில், காயப்பட்டோரை எவ்விதம் அடையாளம் கண்டு, எவ்வகையில் அப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றுவீர்கள்?
3. திருச்சபை மற்றும் ஆரோக்கியம்தரும் பராமரிப்பு அமைப்புகள், வாழ்வுதரும்தொடுதல், ஊக்கம்தரும் கருவிகளாக செயற்படக்கூடிய உறுதியான ஆலோசனைகளைக் கூறுங்கள்.

மன்றாடுதல்: அனைவருக்கும் அன்புக்குரிய இறைவா, காயப்படுவோரின் தேவைகளைக் காணும் வகையிலும், இழப்புகளை ஈடுசெய்ய, குணம்பெற, மறுசீரமைக்கப்பட திசையறியாது தவிக்கும் மக்களைக் காணும் வகையிலும் எங்கள் கண்களைத் திறந்தருளும். இந்நிலையிலுள்ளவர்களைத் தொடவும், சமாதானம் மற்றும் முழுமைக்கு வழிநடத்தும் கருவிகளாக செயற்பட்டு, அவர்களது, நம்பிக்கை மற்றும் மனஉறுதிக்காக பரிந்துரைப்பவரிடம் வழிநடத்திடும் வகையில் எங்கள் ஒவ்வொருவருக்கும் உதவிசெய்தருளும். **ஆமென்.**

Dr. Sunita Noronha,
Assoc. Professor, & Dean of Post Graduate Program, Union Biblical Seminary, Pune).

நாள் 2, செவ்வாய்கிழமை, பெப்ருவரி 12, 2019. கருப்பொருள்: "என்னைத் தொட்டது யார்?"

மீட்பரைத் தொட தடையற்ற விடுதலை. மாற்கு. 6:53-56.

சுட்டெரிக்கும் அனல், பாலைவன சுடும்பாதையில் வழிப்போக்கனொருவன் மயங்கி விழுந்திருப்பதாக கற்பனை செய்துக் கொள்வோம். மயங்கி வீந்திருந்தவனுக்கு சற்று தொலைவில், இலவசமாகக் கிடைக்ககூடிய, குளிர்ந்தநீர் கொண்ட மண்ஜாடிகள் ஓர் தண்ணீர் கொட்டிலில் இருந்தது. அவ்விதம் சற்று தூரத்தில், இலவசமாக தண்ணீர் கிடைக்கிறதென்பது அவனுக்குத் தெரியாது. களைப்பும் சோர்வுற்றுமிருந்தவனுக்கு, வாழ்வு தரும் நீருள்ள இடத்தை அடைய தடைக்கற்களாயிருந்தது. அவ்வழியாக ஒருவரேனும் வரவில்லையெனில், அவனது அழிவு உறுதியே. இன்று நம்மை சுற்றி இருப்போரில் அநேகர் பற்பல தேவைகளோடு உள்ளனர். அவ்விதம் வேறுபடும் தேவைகள், சரீரம், மனஉணர்வு, மனோநிலை, சமுதாய, பொருளாதார மற்றும் ஆன்மீகம் சார்ந்தவைகளாக இருக்கக்கூடும். இவ்விதம் துன்புறுவோரில் அநேகர், அனைத்து நம்பிக்கை இழந்தும், தனிமையும், மனஅழுத்தத்தோடும் இருப்பர். இப்படிப்பட்டோருக்கு நாம், எவ்விதம் குணமளித்தும் நம்பிக்கையையும் தரமுடியும்?

சுருக்கமாக, இந்நாளின் வேதப்பகுதியின் அடிப்படையில் நாம் மூன்று படிப்பினைகளைப் பார்ப்போம்:

முதலாவதாக, இயேசுவை அடையாளம் கண்டுக் கொண்டவர்கள். அவரை, 5000 பேருக்கு உணவளித்து அற்புதம் செய்தவராக, அசுத்த ஆவிக்கு வயப்பட்டிருந்தோரை விடுவித்தவராக, பிணியாளிகளுக்கு சுகம் தந்தவராக மற்றும், உயிரற்றோரை உயிர்ப்பித்தவராக அடையாளம் கண்டுக் கொண்டனர். அவர், எந்த மருத்துவர்களாலும் குணமளிக்க இயலாத, பெரும்பாடோடிருந்த ஓர் பெண்ணை குணமாக்கியுள்ளார். எனவே முதற்படியாக, இயேசுவின் வல்லமை மற்றும் கரிசனையை நாம் அடையாளம் கண்டுக் கொள்ளவேண்டும். பிரார்த்தனை மனநிலையோடு, நற்செய்திகளை வாசிக்கும் பட்சத்தில், இயேசுவை நம்பிக்கையின் புதியகண்ணோட்டத்தோடு காணமுடியும். அப்பொழுது, இயேசுவின் தொடுதல், குணமளித்தும், பரிபூரணத்தை இன்றும் உறுதியளிக்கிறதென்பதைக் கண்டுக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, மக்கள் தங்கள் தங்கள் பணிகளை விட்டுவிட்டு, இயேசு எங்கிருந்தாரோ அங்கே, பிணியாளிகள் குணமடையும்படி அவர்களை அழைத்துவர ஓடினவர்கள். அவர்கள், பிணியாளிகளை தரைவிரிப்பில் வைத்து, சுமந்து துரிதமாக இயேசுவிடம் கொண்டுவந்தார்கள். இன்று நாமோ, பிறருக்கு உதவி செய்ய சமயமில்லாமல் அனைவரும் மும்முரமாக இருக்கிறோம். பலசமயங்களில், நாம் நம்மை சுற்றியிருக்கும் தேவைகளிலுள்ளோர், நொறுங்குண்டவர்கள், கீழ்மட்டத்திலிருப்போர், புண்பட்டிருப்போர், வறுமையிலிருக்கும் நபர்களை கவனித்தும் கவனியாதிருக்கிறோம். இதற்காக நாம், இறைவனிடம் மன்னிக்க வேண்டியும் மற்றும், இன்னும் அதிகமாக உணர்வுள்ளவர்களாகவும் இரக்கமுள்ளவர்களாகவுமிருக்க மன்றாடவேண்டும். அப்பொழுது, தேவையிலிருப்போரை அணுகவும், அவர்களை இயேசுவின் தொடுதலுக்குள் இணையச்செய்து அவர்களது வாழ்வில் நாம் அவரது தொடுதலாக முடியும்.

மூன்றாவதாக, இயேசுவின் ஆடைத் தொங்கலைத் தொட்டு குணமானவர்கள். ஒருசிலர் மட்டுமல்ல, மாறாக அனைவரும் குணமானார்கள். 'இயேசு தொடுதலின்' குணமளிக்கும் அற்புதம் மீண்டும் கிரியை செய்தது. இயேசுவின் குணமளித்தும், முன்னிலைக்குத் திரும்ப கொண்டுவரும் வல்லமையையும் நாம் நம்பவேண்டும். இயேசு அனைத்து மனித சமுதாயத்தை நேசிக்கிறார் என்றும் அவர் நமது தேவையின் அழுகுரலுக்கு பதிலளிக்கிறார் என்றும் நம்பவேண்டும். மெய்யாகவே நாம் இயேசுவின் வல்லமையின்மீது நம்பிக்கை வைத்திருப்போமேயானால், தேவையிலிருப்போருக்காக நாம் மன்றாடுவோம். அப்படிப்பட்டோரிடம் நாம் இயேசுவின் அன்பைப் பகிர்ந்துக் கொண்டும் அவரது குணமளிக்கும் தொடுதலைப்பெறவும் அப்படிப்பட்டவர்களை அழைப்போம்.

சிந்தனைக்குரிய ஆகாரம் :

1. இந்தவாரத்தில் இயேசுவை இன்னும் சிறப்பாக அறிந்துக் கொள்ளவும், அவரது வல்லமை மற்றும் இரக்கத்தைக் கண்டுக்கொள்வதற்குரிய வழிகளையும் சிந்தியுங்கள்.
2. எவ்விதம் உங்கள் வாழ்வை புதிய முறையில் சீரமைப்பதின் வழியாக அனுதின வாழ்வில் குறைந்த பட்சம், தேவையிலிருக்கும் ஒருவருக்காகிலும் உதவிக்கரம் நீட்ட இயலும்?
3. இயேசுவின் தொடுதல் அனைவரையும் குணமாக்கவும் பரிபூரண வாழ்வையும் தரவல்லது என்பதை உண்மையாக நம்புகிறீர்களா? உண்மையென நம்பும் பட்சத்தில், அந்த நம்பிக்கையை பிறரோடு எவ்விதம் பகிர்ந்துக் கொள்வீர்கள்?

மன்றாடுதல்: அன்புள்ள ஆண்டவர் இயேசுவே, நீர் வல்லமையுள்ளவரெனவும் இரக்கத்தோடு குணமளிப்பவரெனவும் கண்டுக் கொள்ள உதவிசெய்யும். என்னுடைய அவநம்பிக்கை, சுயநலம் மற்றும் இரக்கமின்மையிலிருந்து விடுதலைப்பெற்று செயல்பட தயவாய் அருள்புரியும். இன்று உமது தொடுதலின் அனுபவத்தைப் பெற்றதோடு பிறரை உம்மிடம் வழிநடத்திட உதவி செய்தருளும். **ஆமென்.**

Dr. Mrs. Vasantha Thomas,
National Director, Arpana Ministries, Pune.

நாள் 3, புதன்கிழமை, பெப்ருவரி 13, 2019. **கருப்பொருள்**: "என்னைத் தொட்டது யார்?"

குணமாகுதலை நோக்கி நம்பிக்கையோடு யாத்திரை. லூக்கா 8:44-46.

நம்பிக்கை மற்றும் இரக்கம் நம் அனுதின வாழ்வில் வலிமையத் தந்து நம்பிக்கையோடு தொடர்ந்து வாழ உதவுகிறது. நம்பிக்கை நம்மை மீட்டெடுத்து, குணமாக்கி மற்றும் சமாதானம் தருகிறது. நம்பிக்கை மறுசீரமைப்பு, உள்ளடக்குதல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதலைக் கொண்டு வருகிறது. குணமாகுதலின் வலிமை நமக்குள்ளிருக்கும் நமது நம்பிக்கையோடு வருகிறது. 'என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்,' (லூக்கா.8:46), என இயேசு சொன்னப் பொழுது அவரைக் குறித்து பேசப்படாத இரண்டு பகுதிகளை அறிமுகப்படுத்தினார். அவைகள் யாதெனில், இயேசு தெய்வீக வல்லமையைத் தாங்கி வந்திருக்கிறவறென்றும் மற்றும் அவரிலிருந்து அவ்வல்லமை பிறருக்குச் செல்வதை உணர்ந்துக் கொள்ளும் திறமைகளேயாகும். இயேசு தன்னைக் குறித்தும் தனது குணமளிக்கும் வல்லைமையைக் குறித்தும் தைரியமாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில், இயேசுவின் குணமளிக்கும் வல்லமைக்கும் மீட்பின் நம்பிக்கைக்கு கிடைக்கும் மறுமொழிக்கும் ஓர் சம்பந்தமுண்டு. குணமாகுதலின் சூழலில் நம்பிக்கை எனும் வார்த்தையும் இயேசுவின் உறையாடலும் சிறப்புள்ளதென உணர்ந்துக் கொள்ளமுடிகிறது. சமுதாயத்தின் எல்லைக் கோடுகள் மற்றும் நிபந்தனைகள் அதிமுக்கியமாக நாட்டின் சட்ட திட்டங்கள் இரத்தப்போக்குள்ள பெண்ணின் நம்பிக்கையை சோதனைக்குட்படுத்தியது. எனினும், இயேசு குணமளிப்பவர் என்பதை அவள் நம்பிக்கையோடு வெளிப்படுத்தியவிதம் எல்லாவிதமான மனித அமைப்புகளின் நிபந்தனைகள் மற்றும் எல்லைகளை மிஞ்சியதாக இருந்தது. அவளது நம்பிக்கை அவளது உயிரணுக்களை மட்டுமே குணமாக்காமல் அவளை பரிபூரணமாகக் குணப்படுத்தியும் மீண்டும் முந்தைய நிலைக்கும் கொண்டுவந்தது.

தொடுவதென்பது உண்மையாகவே அதிக சக்தி வாய்ந்தது. நாம் பிறரை நமது சொல், செயல்பாடுகள் மற்றும் அணுகுமுறைகளால் தொடுகிறோம். இறைவன் பிணியாளிகள், துன்பத்திலிருப்போர், வறுமையிலிருப்போர், நசுக்கப்படுவோர் மற்றும் அடக்குமுறைக்குட்பட்டோருக்கும் இறைவனாவார். நிகழ்காலங்களில் சமமின்மைகள், பிளவுகள், அநீதிகள், இனவேறுபாடுகள், வறுமை, கற்பழிப்பு என பல்வேறு ஆபத்தான பலதரப்பட்ட சமூக அமைதியின்மை நம்முள் ப்ரவேசித்து நமக்கு சவால்களாக அமைந்துள்ளது. இன்று நொறுக்கப்படுவோர் மற்றும் குணப்பட விரும்புவோரின் கூக்குரல்கள் நம் காதுகளில் விழுந்தும் விழாததுமாக உள்ளது. ஆயினும், இயேசுவின் தொடுதலில் வல்லமை உண்டு அது நம்மை நொறுக்கப்பட்ட நிலையிலிருந்து குணம்பெற வழிகாட்டுகிறது. தேவைப்படும் நேரத்தில் அதே வல்லமையைப் பயன்படுத்த நமக்கு நிலையான உரிமை உண்டு.

இயேசு அப்பெண்ணின் ஊக்கமான நம்பிக்கையின் அடிப்படையில் அவளை ஏற்றும் முழுமையை அளித்தும் அவளை தமக்குரியவளெனவும் குறிப்பிடுகிறார். இன்றும், அந்த நம்பிக்கையின் வாழ்க்கை பயணமானது பல்வேறு எல்லைகளாலும் சூழ்நிலைகளாலும் சோதிக்கப்படுகிறது. புறக்கணிப்பு, அச்சம், குற்றவுணர்வு, நம்பிக்கையற்ற நிலைமை, சந்தேகம், மற்றும் அவநம்பிக்கைப்போன்ற பலவீனங்கள் மனிதரின் பார்வையை மறைத்து அவர்களது நம்பிக்கையின் பயணத்தில் இறைவனது குணமளிக்கும் தொடுதலின் கவனத்திலிருந்து திசைத்திருப்புகிறது. இதைப்போன்ற நிகழ்வுகள் நம்மைச் சுற்றி நடந்துக் கொண்டிருப்பதால், நாம் சுலபமாக திசைத்திருப்பப்பட்டு நம்பிக்கை மற்றும் கிருபை நிறைந்த வாழ்வை வாழ முடியாமல் செய்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் பேராற்றல் வாய்ந்தவர்களை, பல்வேறு வடிவங்களில் காண்பதாலும் மற்றும் கவனச் சிதைவினால் மனக்குறையோடு பிடிப்பற்ற மனோநிலைக்குள்ளாகிறோம். அச்சமயங்களில், நாம் நமது நம்பிக்கையைச் சந்தேகித்து மற்றும் இறைவன்மீதுள்ள நிலைப்பாட்டையும் வினவ முனைகிறோம். பயங்களும் சந்தேகங்களும் ஊர்ந்து உள்ளே வருவதால் மன்றாட்டின் தூரமே உள்ள இறைவனை மறந்து விடுகிறோம். அப்படிப்பட்டத் தருணங்களில், இயேசுவின் குணமளிக்கும் வல்லமையுள்ள தொடுதலை அணுகினால் நாம் முன்பிருந்த நிலையையும் குணமாகுதலையும் பெறலாம்.

சிந்தனைக்குரிய ஆகாரம்:

1. இறைவன் நமக்களித்த அசைக்க இயலாத வல்லமையை நாம் குணம்பெறவும் பிறர் குணம்பெரும் வாய்க்காலாகவும் இருக்கிறோமா?
2. நாம் எல்லைகளைக் கடந்து இறைவன் தரும் வல்லைமையை பிறரைத் தொடவும் குணமாக்கவும் பயன்படுத்துகிறோமா?

மன்றாட்டு: இறைவனே, எங்கள் யாத்திரையில் உம்மை நம்பிக்கையோடே தொட உதவி செய்தருளும். இவ்வாழ்க்கையில் நாங்கள் நம்பிக்கையோடு உம்மில் இணைந்திடும்போது நீர் எங்களைத் தொடும்படி அனுமதிக்கச்செய்யும். எங்களைப் புதுப்பித்து, எங்களைக் குணமாக்கி, உமது அன்பின் ஆவி, சமாதானம் மற்றும் மகிழ்ச்சியை எங்களுக்குள் பதியச்செய்து உமது போற்றுதலுக்குரிய அழைப்போடு வாழ அருள்தாரும். **ஆமென்.**

Ms. Imtimenla Aier,
Secretary, CMAI Chaplains Section.

நாள் 4, வியாழன்கிழமை, பெப்ருவரி 14, 2019. **கருப்பொருள்:** "என்னைத் தொட்டது யார்?"

நம்பிக்கையோடுதொடுவதால்இறைவனின்மறுமொழியைவரவேற்கிறோம்.
மாற்கு. 5:21-34 மற்றும் லூக்கா. 8:42b-48.

இரத்தப்போக்கோடிருந்த ஓர் பெண்ணை குணமாக்கிய நிகழ்வு நம்பிக்கையோடு தொட்டதின் ஓர் விருத்தாந்தம். பெயரிடப்படாதப் பெண் கிட்டத்தட்ட அசுத்தமானவளாகவும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவளாகவும் இருந்ததால், கூட்டுறவிலிருந்தும் சமய வாழ்விலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாள். மனதை உருக்கும் அவளது நீடித்த காலமான நிலைமை மற்றும் மருத்துவத்துறை தொழில்சார்ந்தவர்களிடம் பெற்ற கடந்தக்கால துன்பம் தந்த அனுபவத்தால் இயேசுவின் உதவியை வெளிப்படையாக நாடத் தயங்கினாள்.

மேலும், தேவைகளிலிருந்த அநேகர் இயேசுவை சுற்றி சூழ்ந்திருந்ததால் அந்நெருசலில் காணாமற்போன நிலயில் அவளது நம்பிக்கையின் முயற்சி ஏறக்குறைய இறுதியானதாக இருந்திருக்கக்கூடும். அவளது தளராத நம்பிக்கை மற்றும் துணிவினாலும், இயேசுவின் கவனத்தை ஈர்த்திருந்தாள் - யவீருவின் மகள் குணமாக்கப்படுவதைக் காட்டிலும் உடனடியான கவனம் தன்மீதிருக்க வேண்டும் எனும் செய்தியை இயேசுவுக்குத் தெரிவித்தாள். இயேசுவின் மறுமொழி அனேகமாக அவர் மனதளவில் உணர்ந்ததைவிட துரிதமாகவே காணப்பட்டது. அவரிடமிருந்து குணமளிக்கும் வல்லமை சடுதியாக புறப்பட்டு, அவளது இரத்தப் போக்கை உடனடியாக நிறுத்தியது. இதுமட்டுமே-சரீரகுணம், அவளது தேவையாக இருந்தது.

ஆனால் இயேசுவோ அவளை மற்றொரு குணமாகுதலின் நிலைக்குக் கொண்டுச் சென்றார். இயேசுவின் நேருக்கு நேர் கேள்வியான "என்னைத் தொட்டது யார்" என்பது தனது ஆடையின் தொங்கலைத் தொட்டவரை அறிமுகப்படுத்துவது மட்டுமேயல்லாமல், அவளது அச்சத்தை மேற்கொள்ள அழைத்து மற்றும் அங்கு நடந்த குணமாக்கின நிகழ்வை பகிரங்கமாக சாட்சிபகர ஓர் துணிவுள்ள அழைப்புமாகவும் இருந்தது. வழக்கத்திற்கு மாறான தொடுதலினால் ஒருபுறம் பேதுரு வியப்போடு நின்றிருக்க, இயேசுவின் அதிகாரமான செயல்பாடு அவர் வெறுமனே இறைவனது செயல்பாடுகளின் வாய்க்கால் வழியல்ல மாறாக உண்மையான தெய்வீகத்தன்மை வாய்ந்த துவக்கமே என்பதை வெளிப்படுத்தினார்.

"மகளே" என இயேசு அவளை அழைத்தது (சமுதாயத்தால் அசுத்தமானவள் என்று கருதப்பட்டவள்) மற்றும் "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்ற அவரது அறிவிப்பு சமூகம் அவளைப் பிரித்து வைத்திருந்தாலும் இறைவனின் குடும்பத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டாள் என்பதை உறுதிசெய்தார். "சமாதானம்" (லூக்கா.8:48) என இயேசு உரைத்தப்பொழுது இறைவனோடும் மற்றும் விசுவாச சமுதாயத்தோடும் சரியான உறவிற்குள்ளிருக்கவும் மற்றும் மனிதத் தன்மைகளை முழுவதுமாக அவளிடம் ஒப்படைத்தும் அவளை வரவேற்கிறார். விசுவாசத்தோடு தொட்டதினால் அவளுக்கு இதுவே இறைவனின் மறுமொழியானது.

இந்நிகழ்வினால் காலதாமதம் ஏற்பட்டு அதினால் யவீருவின் மகளை இழக்க நேர்ந்தது. ஆயினும், பிற்பாடு இயேசு அவளை எழுப்பினார். எப்படியாயினும், இந்நிகழ்வு மனித பரஸ்பர உறவை வலியுறுத்துகிறது - நம்பிக்கையின் தொடுதல் உடனடியாக இறைவனது மறுமொழியாக அவரது செயல்பாட்டைத் தூண்டுகிறது. இவ்வகை மறுமொழி இந்தியாவிலுள்ள விசுவாச சமுதாயங்கள் மற்றும் சம்பந்தப்பட்டு அக்கறை காட்டும் நிறுவனங்களுக்கும் நொறுக்கபட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், அடையாளம் காட்டப்படாதவர்கள், மற்றும் இன்றைய உலகின் பெருங்கூட்டத்தில் காணாமற் போகும் மனிதர்களாக மதிக்கப்படாதவர்கள் மீது அக்கறைக் காட்டின இயேசுவைப் பின்பற்றவும் ஆணைத் தரப்படுகிறது.

சிந்தனைக்குரிய ஆகாரம்:

1. நமது குணமளிக்கும் பணி குழுக்கள் மற்றும் அமைப்புகள் எவ்வழிகளில் சென்று சரீர நிலைகளுக்கப்பால் மனித வாழ்வின் மற்ற நிலைகளைத் தொடமுடியும்?
2. விசுவாச சமுதாயங்கள் மற்றும் அக்கறைக் காட்டும் அமைப்புகள் எவ்விதம், உணர்வுள்ளவைகளாகியும் இன்றைய பெருங்கூட்டத்தில் காணாமற் போனவர்களின் சார்பாகவும் செயலாற்ற முடியும்?

மன்றாடுதல்: இறைவனே, உம்மண்டை வருவோரை ஒருபோதும் நிராகரிக்காதவரே, என்னை / எங்களை பெருங்கூட்டத்தில் காணாமற்போனவர்களின் தேவைகளைச் சந்திக்கும் உணர்சியுள்ளவர்களாக மட்டுமே இல்லாமல் மாறாக செயல்பட்டு இயங்கவும் உதவி செய்யும். நாங்களும் மற்றும் எங்களது விசுவாச சமுதாயங்கள் மற்றும் அக்கரைக் காட்டும் அமைப்புகளும் எங்களது அழைப்பிற்கும் சாட்சி பகருதலுக்கும் உண்மையுள்ளவர்களாக இருந்து, இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் அவர் வழியாகவும் தொடர்ந்து இவ்வுலகில் பணியாற்றிடச் செய்யும். **ஆமென்.**

Fr. Dr. George Varughese,
UBS, Pune.

நாள் 5, வெள்ளிக்கிழமை, பெப்ருவரி 15, 2019. **கருப்பொருள்:** "என்னைத் தொட்டது யார்?"

சிறப்பான தொடுதலின் தனித்தன்மை: தள்ளப்பட்டதிலிருந்து ஏற்றுக் கொள்ளப்படுதல். மாற்கு 1:40-45.

இயேசுவின் அருட்தொண்டு மற்றும் அருட்பணிகளை மூன்று வகைப்படுத்தலாம்: போதித்தல், பிரசங்கித்தல் மற்றும் குணமாக்குதல் (மத். 4:23). குணமாக்குதல் பலவழிகளில் நடைபெற்றது. தேவையிலிருப்போர்மற்றும்மனமுடைந்துப்போனவர்களைத்தொடுவதுபலவழிகளில்ஒன்றாகும் (லூக்.7:11-14; 8:44-48; மாற்.1:40-45; 7:31-37). யூத சட்டத்தின்கீழ் மரித்தோர், தொழுநோயாளிகள் மற்றும் வீட்டுவிலக்குக்குரிய கோளாறுள்ளோரைத் தொடுவதால் இயேசு அசுத்தறாகிறார். இயேசுவுக்குமுன்இரண்டுஉரிமைகள்: ஒன்று யூத சட்டத்தோடு இசைந்திருப்பது, மற்றொன்று கடினமான சட்டத்தைவிட்டு வெளியேருவது. இயேசு வெளிப்படையாகவே இரண்டாவது உரிமையை தெரிவுசெய்தார்.

வேதாகமக் காலத்தில் தொழுநோய் ஓர் பயப்படத்தக்க வியாதியாகக் கருதப்பட்டது. அவ்வியாதி படிப்படையாக தோற்றத்தைக் குலைக்கக் கூடியதாகும். லேவியராகமப் புத்தகத்தில் இந்நோயைக் குறித்து விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது (லேவி.13-14அதிகாரங்கள்). தொழுநோயுள்ளவர்கள் 'அசுத்தம், அசுத்தம்,' என கூக்குரலிடும்படி அறிவுறுத்தப்பட்டதின் காரணம் பிறர் அவர்களைத் தொட்டுவிடும் பட்சத்தில் சமுதாயத்தின் பல்வேறு - சரீரம், மனஞ்சார்ந்த, சமூக மற்றும் சமய நிலைகளிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். இறைவன் தொழுநோயாளியை தூய்மையாக்கியதாக பழைய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (எண்.12:10-15 {7 நாட்கள் தனிமையாக்கப்பட்டது}; 2 இராஜாக்கள் 5:1-14{7 முறை முழுகுதல்}). நாகமான் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தப்பொழுது, எலிஷா எனும் தீர்க்கன் ஒருவேளை யூத சட்டத்தை அறிந்திருந்ததினால் யோர்தான் நதியில் ஏழுதரம் சுத்தம் செய்துக் கொள்ள அவனுக்குக் கட்டளையிட்டான் (2 இராஜாக்கள். 5:10). தொழுநோயாளிகள் தொடக்கூட அருகதையற்றவர்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. எனினும், மாற்கு 1:40-45ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழுநோயாளி இயேசுவைக் குறித்து அறிந்திருந்ததாலும் குணமாக வேண்டுமென்ற ஆவல் இருந்ததாலும் அனேகமாக அவனது பிரிவினரின் கூட்டத்திலும் சமுதாயத்திலும் அங்கமாக விரும்பினான். 'உமக்குச் சித்தமானால் (ஊகித்தலில்லாமல்) என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் (இயேசுவின் திறமையில் சந்தேகமின்றி),' தொழுநோயாளியின் இவ்வார்தைகளைக் கேட்ட உண்மை ஆதாரமான இயேசு மேற்கோள் காட்டிடும் வகையில் மாற்று வழியைத் தெரிவு செய்தார். அவரது இரக்கத்தின் மிகுதியால் (ஆழமான அனுதாபம்) அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்தார். அவர் தீண்டத்தகாதவனைத் தீண்டினார் (மதச் சடங்குகளை மாசுபடுத்தும் யூதமத நிபந்தனைகளுக்குத் தான் கட்டுப்பட்டவரல்ல என்பதை வெளிப்படுத்தினார்) மற்றும் 'எனக்குச் சித்தமுண்டு (நிகழ்காலம்; அதிகாரத்தோடுக் கூடிய அறிவிப்பு); சுத்தமாகு (வரையறையில்லாத அஹிம்சா முறைப்படி, இறுதியான செயலைப் பெற்றுக்கொள்),' என அவனுக்குச் சொன்னார். இவ்விதம் சொன்ன மாத்திரத்தில் தொழுநோய் அவனை விட்டகன்றதும் அவன் சுத்தமாக்கப்பட்டான். அது நிறைவாயும் மற்றும் அனைவருக்கும் அவன் நிதர்சனமானான். விறைப்பான யூதமத நிபந்தனைகளை அறிந்திருந்த இயேசு குணமாக்கப்பட்டவனை நோக்கி போய் சமய குருவினிடம் இழந்துப் போன ஆரோக்கியத்தை மீண்டும் பெற்றுக் கொண்டதைக் காட்டு என்றார். 'ஆனால்' குணமானவனோ புறப்பட்டுப் போய், இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம்பண்ணத்தொடங்கினான் (அதிகப் பட்சமாக விளம்பரப்படுத்துதல்). தெய்வீகத் தொடுதல் அவனைத் தள்ளப்பட்ட நிலையிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைக்கு வழிநடத்தியது.

நாமும் பல துண்டுகளாக்கப்பட்ட உலகில், சாதி, இனம் மற்றும் அச்சுருத்தும் நோய்களின் அடிப்படையில் பிளவுப்பட்டச் சுவர்களோடுள்ள ஓர் உலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். தொழில்நுட்ப ஏணியின் உச்சத்தில் நாம் வாழ்ந்து வந்தாலும், சபையிலும் சமுதாயத்திலுமுள்ள நாம் இன்னும் 'பிறரை' தீண்டப்படாதவர்கள் என்றே கருதுகிறோம். இயேசுவின் சீடர்களான நம்மிடம், பிரிவினைகளுக்குரிய விறைப்பான மதிற்சுவர்களைத் தகர்த்தெரிந்து பல துண்டுகளாக்கப்பட்ட சபையையும் சமுதாயத்தையும் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறோம்.

சிந்தனைக்குரிய ஆகாரம்:

1. உண்மையான ஆதாரமான, இயேசுவைத் தொட அல்லது இயேசுவால் தொடப்பட மனமுண்டா?
2. நம்பிக்கையோடு இயேசுவைத் தொடக் கூடாதப்படி உன்னைத் தடுப்பது என்ன?
3. இன்று, ஆழ்ந்து ஆராய்ந்தப் பின்பு பிறது வாழ்வைத் தொட முடிவெடுப்பீறா?

மன்றாட்டு: இறைவா, உமது பிரத்யேகமானத் தொடுதல் என் வாழ்வில் தேவை, அப்படிப்பட்டத் தொடுதல் முன்பிருந்த என் வாழ்வைத் திரும்ப எனக்குத் தரும். நிராகரிக்கப்பட்ட மற்றும் மனத்தளர்வுற்றிருக்கும் 'பிறரை' தொட நான் விரும்புகிறேன். உமது கண்கள் வழியாக பிறரைக் காண எனக்குத் துணை செய்யும். **ஆமென்.**

நாள் 7, சனிக்கிழமை, பெப்ருவரி, 16, 2019. **கருப்பொருள்:** என்னைத் தொட்டது யார்?"

சபையோர்: தெய்வீகத் தொடுதலின் வாய்க்கால்கள். அப்போஸ்தலர் 3:1-10.

'என்னைத் தொட்டது யார்' எனும் இறைவனின் உணர்ச்சி வெளிப்பாடு துன்புறும் மனித இனத்தோடு இணைந்துள்ளது. ஆதியாகமம் முதல் மூன்று அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் படைப்பின் வரலாற்றில் வலியுறுத்தப்படும் அரவணைக்கும் செய்தியாதெனில் இறைவனது தொடுதலின் வழியாக மனிதஇனம் வாழ ஆரம்பித்தது. வேதாகமத்தில் இறைவனது விருப்பமான மனிதர்களோடு இணைந்திருக்க வேண்டும் என்பதை மனித சமுதாயம் மற்றும் இஸ்ரவேல் சமுதாயத்தின் வரலாறுகள் வழியாகக் காண முடிகிறது.

நற்செய்திகளில் காணப்படும் குணமாக்குதல் மற்றும் அற்புதங்களின் பின்னணிகள் தெய்வீக-மனித உறவுகளின் ஆற்றல் மிக்க பரிமாணத்தை சுட்டிக் காட்டுவதைக் காணலாம். குறிப்பாக, எப்பொழுதெல்லாம், இறைமக்கள் கடினமான சூழ்நிலைகளுக்குட் படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் இறைவன் தொடர்ச்சியாக தனது பிரசன்னம் அவர்களோடே இருக்கிறதென்பதை உறுதி படுத்துகின்றார். துன்பத்திலிருந்தப் பெண் குணமளிக்கும் வல்லமையை அனுபவித்தப் பொழுது இயேசுவின் கேள்வி 'என்னைத் தொட்டது யார்,' என்பதுதான், தொடுதலை ஆரம்பித்தது அந்தப் பெண்ணேயாயினும், இதனைத் துயறுரும் மனித சமுதாயத்திற்கு இறைவன் வரைந்த பரந்த சித்திரத்திற்குட்படுத்தவேண்டும், அதாவது, 'நான் யாரைத் தொட்டேன்' என்றல்ல மாறாக 'என்னைத் தொட்டது யார்,' என்பதுதான் இயேசுவின் கேள்வி.
அப். 3:1-10ல் காணும் குணமளிக்கும் விருத்தாந்தப்படி குணமளிக்கும் பணியில் சபையின் பெரும்பங்கு உள்ளதைத் தெளிவாக்குகிறது. இவ்விருத்தாந்தம் வருணிப்பதாவது பேதுரு மற்றும் ஓர் துன்புற்றிருந்த மனிதனிடையே நடந்தத் தொடுதலின்போது பேதுருவின் செயல், "வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கி விட்டான்."

பேதுருவின் இச்செயலிலிருந்து குறைந்தப்பட்சம் மூன்று வேதாகம உண்மைகளை அறிந்துக் கொள்ளக்கூடும்.

1. **மனிதனின் இயற்கைக் குணம்: அலங்கார வாசலண்டை தேவையோடிருந்த கவனிக்கப்படாத ஓர் மனிதன்.**
   இறைவனது சந்நிதானத்திலிருந்தும் பிறரை சார்ந்திருந்த ஓர் மனிதனை இங்கே காண்கிறோம், ஆனால் இறைவனது வல்லமையான முன்னிலையில் வாழ்வின் முழுத்தன்மையை இன்னும் அனுபவிக்கவில்லை. பல கோணங்களிலிருந்துப் பார்க்கும்போது அவனால் இயல்பான வாழ்க்கையை வாழ முடியாமல் வரையறுக்கப்பட்டிருந்தது. அலங்கார வாசலருகே அமர்ந்திருந்தாலும், முரண்பாடான ஒன்று என்னவெனில் தேவையோடிருந்தவன் கவனிக்கப்படாதவனாக, ஏக்கத்தோடிருந்தவனாக மற்றும் எதிர்பார்ப்போடிருந்தவனாகக் காணப்பட்டான்.

2. **இறைவனது குணமாக்குதலின் வாய்க்கால்: இறைவனது குணமளிக்கும் வலிமையில் பேதுருவின் நம்பிக்கை.**
   அந்த பாதிக்கப்பட்ட மனிதனின் குணமாகுதல் பேதுருவின் அர்ப்பணிப்பினால் சாத்தியமானது. இந்த மனிதனைப் பிற்ர் 'பார்த்திருந்தாலும்,' இறைவனது குணமளிக்கும் வலிமையில் பேதுருவிற்கிருந்த நம்பிக்கையே பாதிக்கப்பட்ட மனிதனின் வாழ்வில் மாற்றம் ஏற்பட ஏதுவாயிருந்தது. இறைவனிடமிருந்துதான் குணமளிக்கும் ஆதாரம் புறப்பட்டோடுகிறது என்பதைப் புரிந்துக் கொள்வதுதான் முக்கியமான ஒரு பாடமாக இருப்பதால் குணமளிக்கும் பணியில் நாம் பங்காளிகளாக இருக்க முயற்சிப்பதையும் நினைவூட்டுகிறது. நமது அவநம்பிக்கையினால் இறைவனது சர்வ வலிமையை வரையறுத்து விடுகிறோம். 'பிற குணமளிக்கும் ஆதாரங்களை' அதிகப் பட்சமாக சார்ந்திருக்கும் சிந்தனையினால் அதாவது, மருத்துவம் சம்பந்தமான அறிவு மற்றும் தொழில் நுணுக்கங்களைச் சார்ந்திருப்பதினால் குணமளிக்கும் பணியை மனதால் புரிந்துக் கொள்வதின் தன்மையின் அளவு குறைகிறது. காலப்போக்கில் தொண்டு புரியும் மருத்துவ மனகளின் நோக்கமே மறக்கப்பட்டும் குணமளிக்கும் பணியில் சபையின் தொடர்பு துண்டிக்கப்பட்டும் போகலாம். குணமளிக்கும் பணியின் உரிமை சபையினுடையது ஏனெனில் சபைதான் இறைவனது தொடுதலின் வாய்க்கால்களாக இயேசு கிறிஸ்துவின் தொடுதலின் வல்லமையை மக்களின் வாழ்வில் மெய்ப்பிக்க வேண்டிய உரிமையை கொண்டுள்ளதாகும்.

3. **குணமாக்கப்பட்டவர்களின் புதிய நிலை: சபையின் உறுப்பினரானார்கள்:**
   பாதிக்கப்பட்டவனின் நிலை குணமாக்கப்பட்டப்பின் மறுரூபமானது. வாசலின் வெளிப்புறத்திலிருந்து வழிபடும் இடத்தின் உள்ளே பிரவேசித்தான். அவன் ஒரு புதிய சரீர, சமூக, பொருளாதார மற்றும் திருச்சபை நிலையைப் பெருகிறான் மற்றும் ஓர் நம்பிக்கை மற்றும் வழிபடும்

சமுதாயத்தில் ஒன்றுபடுகின்றான். இறைவனோடு ஓர் புதிய உறவு உருவாகிறது. இவையெல்லாம் உண்மை நிலையானதற்கான காரணம் ஓர் அர்ப்பணித்த திருச்சசபையின் அங்கத்தினரும் மற்றும் குணமாகப்பட்டவனைத் தங்களோடு இணைந்து வழிபட ஏற்றுக் கொண்டவர்களுமேயாகும். இவ்வகையில் குணமளிக்கும் பணி திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது.

இக்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களால் மனந்திறந்து கேட்க இயலாத கேள்விகளாவன "நாங்கள் தீண்டத்தகாதவர்களா?" "யாரேனும் எங்களைத் தொடுவார்களா?" "என்னைத் தொட யாரேனும் உண்டா?." மனிதன் தொடுவதால் குணமாகுவதின் சாத்தியமான ஆதாரம் மனித இனத்தை இறைவன் தொடுவதினாலேயாகும். இறைவனதுத் தொடுதலின் வாய்க்கால்களாகும்படி நாம் மனதார ஆயத்தமா?

சிந்தனைக்குரிய ஆகாரம்:

1. இறைவனுக்கு எவ்வகையான வாய்க்கால்களாக இருக்கிறோமென மன்றாடுதலோடு நாம் தற்சோதனை செய்வோமா?
2. இறைவனின் வாய்க்கால்களாகி கிறிஸ்துவைப் போல் வாழ்வினைத் தொட்டு மனித சமுதாயத்திற்கு நம்மால் சேவை செய்யக்கூடுமா?

மன்றாட்டு: "இறைவா, தெய்வீக குணமளிப்பவரே, எங்களையும் என்னையும் பாதிக்கப்பட்டிருக்கும் மனித இனத்திற்கும் உமது தொடுதலின் வாய்க்கால்களாக்கி எங்களை முன்னிறுத்தி எங்களது நேசம் மற்றும் உமது குணமளிக்கும் வல்லமையால் பயன்படுத்திக்கொள்ளும்." **ஆமென்.**

The Revd. Dr. Israel David, A.,
Union Biblical Seminary, Pune.